திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இழப்பு இல்லை என்று சொல்லிய காரணத்தால், அந்தக் கணக்குகளை வைத்துக்கொண்டுதான் சொல்லியிருப்பார்கள் என்று நான் கருதினேன், இப்போது வேலை நிறுத்தம் நடந்துகொண்டு இருக்கிற நேரத்தில் அங்கே வேலை செய்து வருகிற தொழிலாளர்கள் ரூபாய் 4 பெற்றுக்கொண்டு இருக்கிற நேரத்தில், வெளியே இருந்து புதிதாக எடுத்த ஆட்களுக்கு ரூபாய் 10 கொடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டு இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மதுரை பால்வள நிறுவனத்தில் தற்போது வேலைநிறுத்தம் இல்லை. வேலைநிறுத்தம் இல்லாமல் சரியாக வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, மதுரை பால்வள நிறுவனத்தில் ஏராளமான வெண்ணெய், நெய் போன்றவைகள் அதிகாரிகளின் கவனக்குறைவால் வீணாகி, அவை குழிதோண்டி புதைக்கப்பட்டதாக அரசுக்கு புகார் வந்திருக்கிறதா ? அப்படிப் புகார் வந்திருந்தால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, என்னிடத்திலே தரப்பட்டிருக்கிற விவரங்களில் அந்தத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் ஏதாவது விவரம் இருந்தால், கொடுத்தால், அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

காஞ்சீபுரம் ஒரிக்கை தொழிற்பேட்டை.

* வினா எண். 528—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சீபுரம் ஒரிக்கை தொழிற்பேட்டை வளர்ச்சிக்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 1969 ஆம் வருடம் காஞ்சீபுரம் ஒரிக்கை தொழிற்பேட்டை 4 வாடகை தொழிற் கூடங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 4 தொழிற்கூடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொழில்கள் நடைபெற்று வருகின்றன.

1981 மார்ச் 28]

மேலும் 10 சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள் சிட்கோ நிறுவனத்தால் கட்டப்பட்டு வருகின்றன. உபயோகப் படுத்தப்படாமல் உள்ள நிலங்களை சீர்திருத்தப்பட்ட மனைகளாக மாற்றியமைக்க 'சிட்கோ' நிறுவனத்துக்கு ஒதுக்கீடு செய்வது பற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த ஒரிக்கை பகுதி பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படாததால் தொழில்கள் அங்கே வளர வாய்ப்பில்லை. ஆகவே, அந்தப் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு முன் வருமா? வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப் படும்.

உத்தமசோழபுரம் சுரபுரநாதஸ்வாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள்.

*வினா எண். 529—செல்வி பி. விஜயலட்சுமி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வீரபாண்டி தொகுதி உத்தமசோழபுரத்தில் இருக்கும் சுரபுரநாதஸ்வாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஏக்கர் உள்ளது?

(ஆ) அதை தனியார் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்திருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) வீரபாண்டி தொகுதி உத்தமசோழபுரத்தில் இருக்கும் சுரபுரநாதஸ்வாமி கோயிலுக்கு இப்பொழுதுள்ள மொத்த நிலங்கள் 10.73 ஏக்கர் உள்ளன. (நன்செய் 1.17 மற்றும் புன்செய் 9.56).

(ஆ) 1.42 ஏக்கர் புன்செய் நிலம் 14 நபர்களால் குடிசை களைபோட்டு ஆக்கிரமிப்பில் இருந்து வருகிறது. ஆலய அர்ச்சகர் வசம் 6.54 ஏக்கர் உள்ளது. கருணா ரோலிங் மில் பங்குதாரர் கே. பி. கணேசன் என்பவரிடம் 2.48 ஏக்கர் உள்ளது.

செல்வி பி. விஜயலட்சுமி : மாண்புமிகு தலைவரவர்களே, அறநிலையக் கமிட்டி சிபாரிசின் பேரில் 'ஸ்டீல் ரோலிங்' கம் பெனிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நிலம் எத்தனை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS